©
தமிழ் நாடு அரசு
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 45] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 26, 2014
கார்த்திகை 10, ஜய, திருவள்ளுவர் ஆண்டு–2045

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (2D) எண் 41, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 30 ஜூலை 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1958) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 05–08–2009 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–ல் 257 மற்றும் 258 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/389/2009 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் பருத்தியில் கொட்டை நீக்குதல், பஞ்சு அடித்தல் மற்றும் கழிவுப் பஞ்சினை அகற்றும் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**பருத்தியில் கொட்டை நீக்குதல், பஞ்சு அடித்தல் மற்றும் கழிவுப் பஞ்சினை அகற்றும் பணிகளில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை.* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **1. உயரளவு தேர்ச்சி பெற்றவர்கள்** | | |
| 1 | தட்ச்சர் | |
| 2 | மின்கம்மியர் | |
| 3 | இயந்திரக் கம்மியர் | நாளொறுக்கு ரூ. 123.00 |
| 4 | வில்லோ ஓட்டுநர் | |
| 5 | அழுத்தப்பொறி ஓட்டுநர் | |
| 6 | விதையகற்றுபொறி ஓட்டுநர் | |

| தொடர் எண் | பணியாளர்களின் வகை. | குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **II. தேர்ச்சி பெற்றவர்** | | |
| 1 | பெட்டிப் பணியாளர் | |
| 2 | அழுத்தப்பொறி பொருத்துனர் / பொதுப் பொருத்துனர் / விதையகற்றுபொறி பொருத்துனர் | நாளொன்றுக்கு ரூ. 113.00 |
| 3 | மேலாள் | |
| 4 | அடையாளமிடுபவர் | நாளொன்றுக்கு ரூ. 112.00 |
| 5 | வால்வுப் பணியாளர் | |
| 6 | எண்ணெயிடுபவர் | |
| 7 | மீள்வுறுத்துநர் (ரிவெர்ட்டர்) | நாளொன்றுக்கு ரூ. 110.50 |
| 8 | எடையாளர் | |
| 9 | உருளை உருட்டுபவர் | |
| **III. பகுதி தேர்ச்சி பெற்றவர்** | | |
| 1 | லஸ்கர் (உதவியாள்) | நாளொன்றுக்கு ரூ. 113.00 |
| 2 | பொதி தைப்பவர் | நாளொன்றுக்கு ரூ. 110.50 |
| 3 | விதையகற்றுபொறியில் பருத்தி இடுபவர் | நாளொன்றுக்கு ரூ. 109.00 |
| 4 | சாவி திறப்பாளர் | நாளொன்றுக்கு ரூ. 110.50 |
| 5 | விதையகற்றுபொறி மற்றும் அழுத்தப்பொறி மஸ்தூர்கள் | நாளொன்றுக்கு ரூ. 107.00 |
| **IV. தேர்ச்சி பெறாதவர்** | | |
| 1 | மூட்டை எடுத்துச் செல்லுபவர் | நாளொன்றுக்கு ரூ. 113.50 |
| 2 | போரா நிரப்புபவர் | நாளொன்றுக்கு ரூ. 112.00 |
| 3 | போரா உருட்டுபவர் | நாளொன்றுக்கு ரூ. 109.00 |
| 4 | பொதியாக்குபவர் | நாளொன்றுக்கு ரூ. 109.00 |
| 5 | பருத்தியெடுத்தல் | நாளொன்றுக்கு ரூ. 105.00 |
| 6 | பருத்தியைச் சுத்தப்படுத்த அடிப்பவர்கள் | நாளொன்றுக்கு ரூ. 106.00 |
| 7 | பருத்தி எடுத்துச் செல்பவர் | நாளொன்றுக்கு ரூ. 105.00 |
| 8 | கேப்ஸ் பை திறப்பவர் | நாளொன்றுக்கு ரூ. 106.00 |
| 9 | கேப்ஸ் எடுப்பவர் | நாளொன்றுக்கு ரூ. 105.00 |
| 10 | லின்ட் சுத்தப்படுத்துபவர் | நாளொன்றுக்கு ரூ. 105.00 |
| 11 | தைப்பவர்கள் (பொதி தைப்பவர் அல்லாதவர்கள்) | நாளொன்றுக்கு ரூ. 106.00 |
| 12 | விதை அகற்றுபவர் அல்லது எடுத்துச்செல்லுபவர் | நாளொன்றுக்கு ரூ. 106.00 |
| 13 | பெருக்குபவர் | நாளொன்றுக்கு ரூ. 107.00 |
| 14 | பருத்தி சுத்தப்படுத்தும் இருக்கையாள் | நாளொன்றுக்கு ரூ. 106.00 |
| 15 | அட்டியிடுபவர் | நாளொன்றுக்கு ரூ. 110.50 |
| 16 | போரா திறப்பவர் | நாளொன்றுக்கு ரூ. 105.00 |
| 17 | பருத்திக் கழிவு சுத்தப்படுத்துபவர் | நாளொன்றுக்கு ரூ. 105.00 |
| 18 | துடைப்பான் செய்பவர் | நாளொன்றுக்கு ரூ. 110.50 |
| 19 | மேற்சொன்னவற்றில் சேராத ஏனைய யாதொரு வகை | நாளொன்றுக்கு ரூ. 105.00 |

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை.* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **V. பல்வகை** | | |
| 1 | கணக்காளர் | மாதமொன்றுக்கு **3108.00** |
| 2 | எழுத்தர் / தட்டச்சர் | மாதமொன்றுக்கு **2995.00** |
| 3 | காவலாள் | மாதமொன்றுக்கு **2793.00** |
| 4 | அலுவலகப் பையன் / ஏவலர் | மாதமொன்றுக்கு **2793.00** |

**விளக்கங்கள்:— (1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(*i*) அகவிலைப்படியானது **2000** ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது **1982** ஆம் ஆண்டில் **100** புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட **475** புள்ளிகள் ஆகும்). **475** புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாளொன்றுக்கு ரூ.**5.85** (ஐந்து ரூபாய் எண்பத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(*ii*) முந்தைய **12** மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(*iii*) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) (*i*) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை **26** ஆல் வகுக்கவேண்டும்.

(*ii*) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை **30** ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 45, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 14 ஆகஸ்ட் 2013.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **05–08–2009** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு **2–ல் 260** மற்றும் **261** ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/**392/2009** ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் சவ்வரிசி தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் **(3)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச்சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**2.** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

## விவர அட்டவணை

## சவ்வரிசி தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* (1) | *பணியாளர்களின் வகை.* (2) | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு)* (3) |
|---|---|---|
| 1 | உரிப்பவர்கள் (செய்யும் வேலைக்கேற்ற ஊதியம்) | 70 கிலோகிராம் பை ஒன்றுக்கு 11.50 |
| 2 | நசுக்கி, வகைப்படுத்தி, அரைத்து, வறுக்கும் மற்றும் ஏனைய பல்வகை தொழில்களில் பணியமர்த்தப்படும் தொழிலாளர்கள் | |
| | நிலை – I | 116.00 நாளொன்றுக்கு |
| | நிலை – II | 109.00 நாளொன்றுக்கு |
| 3 | ஓட்டுநர்கள் | |
| | நிலை – I | 3218.00 மாதமொன்றுக்கு |
| | நிலை – II | 2893 மாதமொன்றுக்கு |
| 4 | எழுத்தர்கள் | |
| | நிலை – I | 3288.00 மாதமொன்றுக்கு |
| | நிலை – II | 3025.00 மாதமொன்றுக்கு |
| 5 | காவலாள் | 2893.00 மாதமொன்றுக்கு |

**விளக்கங்கள்:— 1.** (i) உடல்திறன், தேர்ச்சி, திறமை மற்றும் செய்யும் வேலையின் அளவு மற்றும் பணிமூப்பு நிலை ஆகியவற்றின் அடிப்படையில் நிலை – I மற்றும் நிலை – II க்கு நசுக்குதல், வகைப்படுத்துதல், அரைத்தல், வறுத்தல் ஆகிய தொழில்களில் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களை வகைப்படுத்துதல்.

(ii) நிலை – I மற்றும் நிலை – II ஆக ஓட்டுநர்களை வகைப்படுத்துதல்:–

நிலை – I: முறையான பணியில் ஐந்து ஆண்டுகள் முடித்தவர்கள்.

நிலை – II: முறையான பணியில் ஐந்து ஆண்டுகள் முடிக்கப்பெறாதவர்கள்.

(iii) நிலை – I மற்றும் நிலை – II ஆக எழுத்தர்களை வகைப்படுத்துதல்:–

நிலை – I: முறையான பணியில் ஐந்து ஆண்டுகள் முடித்தவர்கள்.

நிலை – II: முறையான பணியில் ஐந்து ஆண்டுகள் முடிக்கப்பெறாதவர்கள்.

**(2) அகவிலைப்படி:–** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(*i*) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982 = 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்ஆகும்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூ.6.05 (ஆறு ரூபாய் ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(*ii*) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(*iii*) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) (*i*) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்கவேண்டும்.

(*ii*) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 46, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 14 ஆகஸ்ட் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1958) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 05–08–2009 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–ல் 256 மற்றும் 257 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/388/2009 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் கருங்கல் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**கருங்கல் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* (1) | *பணியாளர்களின் வகை.* (2) | *மாதாந்திர குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* (3) | | | |
|---|---|---|---|---|---|
| | | *மண்டலம் A (ரூ. காசு)* | *மண்டலம் B (ரூ. காசு)* | *மண்டலம் C (ரூ. காசு)* | *மண்டலம் D (ரூ. காசு)* |
| | **A நிலை–I** | | | | |
| 1 | மேலாளர் | 6110.00 | 5978.00 | 5845.00 | 5713.00 |
| 2 | அடையாளமிடுபவர்/வடிவமைப்பவர் | | | | |
| 3 | தரக்கட்டுப்பாட்டாளர்/செதுக்குபவர் | | | | |
| 4 | எந்திர மேற்பார்வையாளர் | | | | |
| 5 | மின் மேற்பார்வையாளர் | 5052.00 | 4920.00 | 4787.00 | 4655.00 |
| 6 | தானியங்கி மெருகேற்றுபவர் | | | | |

| தொடர் எண் (1) | பணியாளர்களின் வகை. (2) | மாதாந்திர குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு) (3) | | | |
|---|---|---|---|---|---|
| | | மண்டலம் A (ரூ. காசு) | மண்டலம் B (ரூ. காசு) | மண்டலம் C (ரூ. காசு) | மண்டலம் D (ரூ. காசு) |
| | **B நிலை – II** | | | | |
| 7 | துளையிடுபவர் | | | | |
| 8 | மின்பணியாளர் | | | | |
| 9 | பொருத்துநர் | | | | |
| 10 | பற்றவைப்பவர் | | | | |
| 11 | சாணை பிடிப்பவர் | | | | |
| 12 | மெருகேற்றவர் | | | | |
| 13 | வெட்டுங்கருவி இயக்குபவர் | | | | |
| 14 | உளி கொத்துபவர் | | | | |
| 15 | குழாய்வேலை செய்பவர் | 4655.00 | 4556.00 | 4457.00 | 4359.00 |
| 16 | டிப்பர் (Tipper Driver) ஓட்டுநர் | | | | |
| 17 | டிரெயிலர் (Trailor) ஓட்டுநர் | | | | |
| 18 | காங் ட்ரீ (Gang Tree) ஓட்டுநர் | | | | |
| 19 | பாரந்தூக்கி இயக்குபவர் | | | | |
| 20 | காங் அறுப்பான் (Gang Saw) இயக்குபவர் | | | | |
| 21 | கணினி இயக்குபவர் | | | | |
| 22 | கணக்காளர் | | | | |
| 23 | பண்டகசாலை காப்பாளர் | | | | |
| | **C நிலை – III** | | | | |
| 24 | எழுத்தர்/காசாளர் | | | | |
| 25 | பண்டகசாலை உதவியாளர் | | | | |
| 26 | ஸ்லிங்கர் | | | | |
| 27 | சாம்பரிங்கமன் | | | | |
| 28 | சாமணந்தூக்கி இயக்குபவர் | 4258.00 | 4193.00 | 4126.00 | 3994.00 |
| 29 | தச்சுவேலை செய்பவர்/சிப்பமாக்குபவர் | | | | |
| 30 | கணினி உதவியாளர் | | | | |
| 31 | மின் உதவியாளர் | | | | |
| 32 | எந்திர உதவியாளர் | | | | |
| | **D நிலை – IV** | | | | |
| 33 | அலுவலக உதவியாளர் | | | | |
| 34 | காவலாள்/பாதுகாவலாள் | | | | |
| 35 | சுத்தம் செய்பவர்/பெருக்குபவர் | 3994.00 | 3962.00 | 3928.00 | 3895.00 |
| 36 | சுமை ஏற்றுபவர் (மற்றும் கருங்கல் தொழிலில் மேற்குறிப்பிட்டுள்ள எந்தப் பணிவகையிலும் சேராத ஏனைய அனைத்தும்) | | | | |

**விளக்கங்கள்:—** (1) மண்டலங்களின் வகைப்பாடு பின்வருமாறு :

மண்டலம் – A அனைத்து மாநகராட்சிகள்.

மண்டலம் – B மூன்றாம் நிலை நகராட்சிகள் தவிர ஏனைய அனைத்து நகராட்சிகள்.

மண்டலம் – C அனைத்து பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் நகரியங்கள்.

மண்டலம் – D மண்டலங்கள் A, B மற்றும் C மண்டலங்களில் சேராத ஏனைய பகுதிகள்.

**II (1). அகவிலைப்படி:–** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(*i*) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982 = 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்ஆகும்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூ. 8.20 (எட்டு ரூபாய் இருபது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(*ii*) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(*iii*) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**(2)** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**(3)** (*i*) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26–ஆல் வகுக்கவேண்டும்.

**(4)** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 90, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 12 டிசம்பர் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை சென்னை–600 006–ல், உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

**1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்** (b) பகுதியிலும், **5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 12–5–2010 ஆம்** நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு**–2** இல் **252** ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/278/2010 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், கீழேயுள்ள விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதநீர் இறக்கும் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு, அந்த விவர அட்டவணையின் **(3)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**பதநீர் இறக்கும் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *நாளொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| (1) | பனைவெல்லம் தயாரிப்பவர் | 319.00 |
| (2) | உதவியாள் | 319.00 |
| (3) | பதநீர் இறக்குபவர் | 342.50 |

**விளக்கங்கள்: (1)** அகவிலைப்படி: மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, **2010** ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது **2001** ஆம் ஆண்டில் **100** புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட **161** புள்ளிகள்). **161** புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ. **1.98** (ஒரு ரூபாய் தொண்ணூற்றெட்டு காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய **12** மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**(2)** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**(3)** மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை **30** ஆல் பெருக்க வேண்டும்.

**(4)** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 96, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 16 டிசம்பர் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006–ல், உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 15–9–2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு–2 இல் 703 மற்றும் 704 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/573/2010 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாய் நெசவு மற்றும் கூடை முடைதல் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

### பாய் நெசவு மற்றும் கூடை முடைதல் தொழிலில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **1. விசைத்தறிப் பாய்கள்:** | | |
| (1) | கோரை வகை பிரிப்பவர் | நாளொன்றுக்கு ரூ. 159.00 |
| (2) | சாயமேற்றுபவர் | நாளொன்றுக்கு ரூ. 209.00 |
| (3) | சாயமேற்றுபவரின் உதவியாள் (உலை உதவியாள்) | நாளொன்றுக்கு ரூ. 159.00 |
| (4) | பாய் நெசவாளர் | |
| | (i) சாதாரண பாய் | பாய் ஒன்றுக்கு 2.70 |
| | (ii) அழகுபடுத்திய பாய் | பாய் ஒன்றுக்கு 3.60 |
| (5) | பாய் விளிம்பு தைப்பவர் (நீளப் பக்கங்கள் இரண்டிலும் விளிம்பு தைக்க) (துணி அல்லது நாடா மற்றும் நூல் வேலையளிப்பவரால் வழங்கப்பட வேண்டும்.) | பாய் ஒன்றுக்கு 1.80 |
| **II. கைத்தறிப் பாய்கள்:** | | |
| (1) | கோரை வகிர்பவர் | நாளொன்றுக்கு ரூ. 159.00 |
| (2) | சாயமேற்றுபவர் | நாளொன்றுக்கு ரூ. 209.00 |
| (3) | பாய் நெசவாளர்: | |
| | (i) 40 ஆம் எண் பாய் நெசவுக்கு | நாளொன்றுக்கு ரூ. 153.00 |
| | (ii) 50 ஆம் எண் பாய் நெசவுக்கு | நாளொன்றுக்கு ரூ. 171.50 |
| | (iii) 100 ஆம் எண் பாய் நெசவுக்கு | நாளொன்றுக்கு ரூ. 246.00 |
| | (iv) 120 ஆம் எண் பாய் நெசவுக்கு | நாளொன்றுக்கு ரூ. 252.00 |
| | (v) 140 ஆம் எண் பாய் நெசவுக்கு | நாளொன்றுக்கு ரூ. 283.00 |

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| (4) | பாய் விளிம்பு தைப்பவர் (நீளப் பக்கங்கள் நான்கிலும் விளிம்பு தைக்க) (துணி அல்லது நாடா மற்றும் நூல் வேலையளிப்பவரால் வழங்கப்பட வேண்டும்) | பாய் ஒன்றுக்கு 9.00 |
| (5) | மெருகேற்றுபவர் | பாய் ஒன்றுக்கு 3.60 |
| (6) | எழுத்து வடிவமைப்பவர் | வரி ஒன்றுக்கு 45.00 |

**(iii) கூடை முடைதல்:**

| | | |
|---|---|---|
| (1) | மண்கூடை | |
| (2) | விவசாயக் கூடை | |
| (3) | பரிசுக்கூடை | |
| (4) | அரிசிக்கூடை | கூடை ஒன்றுக்கு ரூ. 36.00 |
| (5) | கோழிக்கூடை (பஞ்சாரம்) | |
| (6) | காய்கறிக்கூடை மற்றும் இதர பல்வகைக்கூடைகள் | |

விளக்கங்கள்: (1) அகவிலைப்படி: மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாள் ஒன்றுக்கு 95 காசுகள் (தொண்ணூற்று ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.